மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : அரசியல் ஆதாயத்திற்காக எந்தப் பகுதியில் தண்ணீர் திறந்து விடப்பட்டது? யார் அதனால் பயன் அடைந்தார்கள்? அதைத் தெளிவாகச் சொல்லுங்கள்.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : இப்போது அனேகமாக 10, 15 நாட்களுக்கு முன்னாலேயே 2ஆம் மண்டலத்திற்குத் தண்ணீர் திறந்து விட்டிருக்க வேண்டும். கிட்டத்தட்ட இன்றைக்கு 25 நாட்களுக்கு முன்னாலேயே முதல் மண்டலத்திற்கு விடப்பட்ட தண்ணீர் நிறுத்தப்பட்டிருக்க வேண்டும். முதல் மண்டலத்திற்கு நேற்றுவரை தண்ணீர் பாய்கிறது. எந்தப் பகுதி ஆயக்கட்டு இல்லாத பகுதியோ, எந்தப் பகுதி விரிவாக்கப்பட்ட பகுதியோ, அந்தப் பகுதிக்கு கடந்த 25 நாட்களாக தண்ணீர் விடப்பட்டிருக்கிறது. அதுவும் போக விரிவாக்கப்பட்ட பகுதிகளிலே இன்றுவரை பாசனமே கிடைக்காத ஒரு பகுதி, கிளுவங்காட்டூர் என்ற பகுதிக்கு தண்ணீர் திறந்துவிடப்பட்டதாக தினசரி செய்தி வருகிறது. அதற்கு நான்தான் ஏற்பாடு செய்தேன் என்று பகிரங்கமாகச் சிலர் அறிவித்துக் கொண்டிருக்கிறார்கள். அதைத்தான் நான் அரசியல் ஆதாயம் என்று சொல்கிறேனே தவிர தனிப்பட்ட முறையிலே இதைப்பற்றி குற்றம் சொல்ல வேண்டுமென்று அல்ல. நான் இதிலே நேரடியாகப் பாதிக்கப்படுகிறேன். என்னுடைய தொகுதி நேரடியாகப் பாதிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குற்றச்சாட்டாக சொன்ன காரணத்தாலே விளக்கம் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். பர்ஸ்ட் ஜோன்-க்கு தண்ணீர் $4\frac{1}{4}$ மாதங்களுக்கு முன்னாலேயே விடப்பட்டு, அதிலே ஏற்கெனவே செய்து இருந்த பயிர்கள் முழுமையாக விளைவதற்கு மேலும் 15 நாட்கள் தண்ணீர் திறந்துவிட வேண்டுமென்ற அந்தப் பகுதி விவசாயிகளினுடைய கோரிக்கையை ஏற்றுக்கொண்டதற்குப் பிறகுதான் பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் அதற்கான உத்தரவைப் பிறப்பித்து, 15 நாட்கள் தொடர்ந்து தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. இன்றோ, நாளையோ, அது முடிவடையக்கூடிய தேதியாக இருக்கும் என்று கருதுகிறேன். அதல்லாமல் குடி தண்ணீர்ப் பிரச்சினை ஏராளமாக இருக்கக்கூடிய பகுதிகளில், கிணத்துக்கடவு வட்டாரத்தில் சில குளங்களுக்குத் தண்ணீர் விடப்பட்டிருக்கிறது. அதைத்தான் உறுப்பினர் அவர்கள் சுட்டிக் காட்டுகிறார்கள் என்று நான் கருதுகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலசுப்பிரமணியம் அவர்களுக்குத் தெரியும். மான்சூன் இந்த வருஷம் டிஃபர் ஆகி வந்தது. அதனாலே நடவு நடுவது கொஞ்சம் லேட்டாக ஆகிவிட்டது. அதனால் மாறி மாறி

வருகிறது. நான் நேற்றே சொன்னேன். ஜூன் மாதம் திறக்க வேண்டியது ஆகஸ்டு மாதம்தான் திறந்திருக்கிறோம்—காவிரி. ஆகையாலே இப்போது நிலைமைகள் மாறியிருக்கின்றன. அந்தப் பகுதிகளுக்கு விட வேண்டும். கூடுமான வரையில் எல்லாப் பகுதிகளுக்கும் இருக்கிற தண்ணீரைப் பகிர்ந்து அளிக்கிறோம்.

பரம்பிக்குளம்—ஆளியாறு பற்றி ஒன்றுமே செய்யவில்லை என்று சொன்னார்கள். திரு. பாலசுப்பிரமணியம் அவர்களுக்குத் தெரியாதது அல்ல. நான் பொறுப்பு ஏற்ற பிறகு 4 முறை, கேரள அமைச்சர் திரு. பேபி ஜான் அவர்களோடு பேசி இருக்கிறேன். மீண்டும் டெல்லியிலே கூட பேசியிருக்கிறேன். பல்வேறு பிரச்சினைகள் அதில் உள் அடங்கி இருக்கின்றன. ஆரணியாறு, நல்லாறு திட்டங்கள் எல்லாம் அதிலே சேர்க்கப்பட வேண்டி இருக்கின்றன. அதுபற்றி எல்லாம் விரிவாகப் பேசுவது நல்லதல்ல என்பதால்தான் அமைதியாக உட்கார்ந்து இருக்கிறேன்.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : நேற்றைய தினம் அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். அங்கே நாக்கு நனைகிற அளவுக்கு மழை பெய்து இருக்கிறது என்று சொன்னார்கள். எங்களைப் பொறுத்தவரையில் நாக்கு நனைவதற்குக் கூட அங்கே மழை பெய்யவில்லை. அந்த நிலைமையில்தான் எங்களுடைய பகுதி இருக்கிறது. தண்ணீர் முறைப்படி பாய்ந்து இருக்க வேண்டுமென்று சொல்கிறேன். பாசனத்துக்கு விடவில்லை என்று சொன்னீர்கள். அந்தக் குறையை நான் சொல்கிறேன் (குறுக்கீடு). அந்த மழை கூட எங்களுக்கு இல்லை. குடிப்பதற்கு அங்கு தண்ணீர் இல்லை. அதற்காகத் தான் கேட்கிறோம். ஆக, கேரளாவில் உங்களுடைய தோழமைக் கட்சி ஆட்சிப் பொறுப்பில் இருக்கும் பொழுது, கடலிலே வீணாகக் கலக்கும் தண்ணீரை தமிழகத்துக்குத் திருப்பிவிடுமாறு கேட்டுக்கொள்வதில் தயக்கம் ஏன் ?

13-45 மணி

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : கேரளாவில் எங்களுடைய தோழமைக் கட்சி இருக்கிறது. அவர்கள் தண்ணீர் கொடுக்கவில்லை என்கிறார்கள். ஆனால் கர்நாடகாவில் உங்கள் கட்சியே இருக்கிறது! ஏன் தண்ணீர் கொடுக்கவில்லை ?

திரு, எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : முதலமைச்சர் அவர்கள் நான் முதலிலே பேசும்போது இங்கு இல்லை. நான் முதலிலே சொன்னேன். எங்களுடைய முன்னாள் முதல்வர், இன்றைய மக்களவை உறுப்பினர், என்னுடைய அருமை நண்பர் குண்டுராவ் அவர்கள் தண்ணீர் திறந்துவிடவேண்டும் என்று ஒரு முறைக்கு இரு முறை பத்திரிகையிலே அறிக்கை விட்டு இருக்கிறார். நேரடியாக அவர்களைக் கேட்டுக்கொண்டும் இருக்கிறார். இன்னும் சொல்லப்போனால் நான் அவரைச் சந்தித்தபோது